ISSN: 2582–5518





# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351





திங்கள் ❖ மார்ச். 04, 2024 சென்னை & புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 146 ❖ ரூ.10

### பிரதமர் மோடி இன்று சென்னை வருவதை ஒட்டி 5 அடுக்கு பாதுகாப்பு

# கண்காணிப்பு

## சென்னை, நந்தனம், YMCA மைதானம், சென்னை விமான நிலையம், மற்றும் சுற்றுப்புறங்களிலும், சென்னை செல்லும் வழித்தடங்களிலும், பலத்த பாதுகாப்பு ; காவல்துறை அறிவிப்பு

சென்னை, மார். 4-

பிரதமர் மோடியின் சென்னை வருகையையொட்டி, சென்னை பெருநகர காவல்துறை சார்பில் 15,000 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுடன் 5 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சென்னை பெருநகர காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டிரோன்கள் மற்றும் ஆளில்லா வான்வழி வாகனங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது என்று காவல்துறை அறிவித்துள்ளது.




இதுதொடர்பாக காவல்துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,பிரதமர் நரேந்திர மோடி இன்று (மார்ச் 4) சென்னை, நந்தனம், YMCA மைதானத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்கிறார். பிரதமரின் சென்னை வருகையையொட்டிசிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்வது குறித்து, சென்னை பெருநகர காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர், தலைமையில், கூடுதல் காவல் ஆணையாளர்கள், இணை ஆணையாளர்கள் மற்றும் துணை ஆணையாளர்களுடன் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.

சென்னை பெருநகர காவல் ஆணையர் உத்தரவின் பேரில் சென்னை பெருநகர காவல் கூடுதல் ஆணையர்கள், காவல் இணை ஆணையர்கள், காவல் துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், சட்டம், ஒழுங்கு, குற்றப்பிரிவு, போக்குவரத்து மற்றும் சிறப்பு பிரிவுகளின் காவல் அதிகாரிகள், ஆளிநர்கள், ஆயுதப்படை, கமாண்டோ, தமிழ்நாடு சிறப்பு காவல்படை காவல் ஆளிநர்கள் உள்பட 15,000 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுடன் 5 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பிரதமரின் நிகழ்ச்சி நடைபெறும் சென்னை, நந்தனம், YMCA மைதானம், சென்னை விமான நிலையம், மற்றும் சுற்றுப்புறங்களிலும், சென்னை செல்லும் வழித்தடங்களிலும், பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, தீவிர சோதனைகள் மற்றும் கண்காணிப்பு பணிகள் மேற்கொண்டுவருகின்றன. மேலும், சென்னையில் உள்ள லாட்ஜுகள், தங்கும் விடுதிகள், நட்சத்திர ஓட்டல்கள் மற்றும் விடுதிகளிலும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு சந்தேக நபர்கள் மற்றும் அந்நியநபர்கள் உள்ளனரா என கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், முக்கிய சாலைகள் மற்றும் சந்திப்புகளில் தீவிர வாகன சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தவிர, சென்னையில் உள்ள முக்கிய ரயில் நிலையங்கள், பேருந்து முனையங்களிலும் காவல்துறையினர் மூலம் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, தீவிர கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பிரதமர் வருகையையொட்டி, சென்னை பெருநகரகாவல்ஆணையர் உத்தரவின்பேரில், குவி. மு.ச. பிரிவு 144ன் கீழ் சென்னை பெருநகர காவல்எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டிரோன்கள் (Drones) மற்றும் ஆளில்லா வான்வழி வாகனங்கள் (Unmanned Aerial Vehicles) பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மயிலாடுதுறை மாவட்டத்தின் புதிய ஒருங்கிணைந்த மாவட்ட ஆட்சியரகம் மற்றும் மயிலாடுதுறை, திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் முடிவுற்ற திட்டப் பணிகளை இன்று திறந்து வைப்பதற்காகவும், புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுவதற்காகவும் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொள்வதற்காகவும் நேற்று எழும்பூர் இரயில் நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சென்றார். அவரை பொதுமக்கள் உற்சாகமாக வழி அனுப்பி வைத்தனர்.

## ”ஜிஎஸ்டி, பணமதிப்பிழப்பு மூலம் சிறுதொழில்களை மோடி அழித்து விட்டார்”: ராகுல் காந்தி தாக்கு

குவாலியர் , மார். 4-

"கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு நாட்டில் வேலைவாய்ப்பின்மை நிலவுகிறது. ஜிஎஸ்டி, பணமதிப்பிழப்பு மூலமாக சிறுதொழில்களை மோடி அழித்ததால், பாகிஸ்தான், பூடான், வங்தேசத்தைவிட இந்தியாவில் வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது" என்று ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

மத்தியப் பிரதேசத்தில் நடந்துவரும் இந்திய ஒற்றுமை நீதி யாத்திரையின் போது காங்கிரஸ் எம்.பி., ராகுல் காந்தி பேசியதாவது: இந்திய ஒற்றுமை யாத்திரைக்கு பின்னர் நாம் இந்திய ஒற்றுமை நீதி யாத்திரையை தொடங்கியுள்ளோம். இந்த பயணத்தில் நாம் நீதியைச் சேர்த்துள்ளோம். வெறுப்புணர்வால் நாட்டில் அநீதி பெருகியுள்ள காரணத்தால் நாம் நீதி என்ற வார்த்தையைச் சேர்ந்துள்ளோம். கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு நாட்டில் வேலையில்லா திண்டாட்டம் நிலவி வருகிறது. பாகிஸ்தானுடன்ஒப்பிடுகையில் இந்தியாவின் வேலையில்லா திண்டாட்டம் இரண்டு மடங்காக உள்ளது. ஜிஎஸ்டி, பணமதிப்பிழப்பைக் கொண்டு வந்து மோடி சிறுதொழில்களை அழித்துவிட்டதால்,பாகிஸ்தான், பூடான், வங்கதேசத்தைவிட இந்தியாவில் வேலையில்லாத இளைஞர்களின் எண்ணிக்கை அதிகம்.

நாட்டில் 50 சதவீதம் ஓபிசி, 15 சதவீதம் தலித், 8 சதவீதம் பழங்குடியினர் என மொத்தமாக 73 சதவீதம் பேர் உள்ளனர். ஆனால் நாட்டின் மிகப்பெரிய நிறுவனங்களின் நிர்வாகத்தில் ஓபிசி, தலித், பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்களைப் பார்க்க முடியாது. நாம் சாதிவாரிக் கணக்கெடுக்கைப் பற்றி பேசும் போதெல்லாம், நாட்டில் ஏழை பணக்காரன் என இரண்டு சாதிகள் மட்டுமே இருப்பதாக மோடி சொல்வார். நாட்டிற்கு யார் எவ்வளவு பங்களிப்புச் செய்கிறார்கள் என்ற உண்மையை 73 சதவீத மக்கள் அறிந்து கொள்வதை மோடி விரும்பவில்லை. முன்பெல்லாம் நமது இளைஞர்கள் கடுமையாக உழைத்து ராணுவத்தில் சேர்ந்து மரியாதையைப் பெற்றார்கள். அக்னி வீரர்கள் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் நமது ராணுவ வீரர்கள் பாரபட்சமாக நடத்தப்படுகிறார்கள். இதுமிகவும் அநியாயம்.

பாஜக அரசு கோடீஸ்வரர்களின் லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான கடன்களைத் தள்ளுபடி செய்தது. அந்தப் பணங்கள் எல்லாம் மக்களின் பணங்கள். வரிகளின் மூலம் வசூலிக்கப்பட்டவை. கோடீஸ்வர்களின் லட்சக்கணக்கான கடன்களை மோடி அரசால் தள்ளுபடி செய்ய முடியும் என்றால் விவசாயிகளின் கடன்களை ஏன் தள்ளுபடி செய்ய முடியாது?" இவ்வாறு அவர் பேசினார். இந்திய ஒற்றுமை நீதி யாத்திரை, கடந்த ஜன.14ம் தேதி மணிப்பூரில் தொடங்கியது. இந்த யாத்திரை மொத்தம் 67 நாட்களில், 100 மக்களவைத் தொகுதிகள், 337 சட்டப்பேரவைத் தொகுதிகள், 110 மாவட்டங்கள் வழியாக 6,713 கி.மீ., தூரம் பயணித்து மார்ச் 20-ல் மகாராஷ்டிரா தலைநகர் மும்பையில் நிறைவடைகிறது.



# இன்று

# 4-3-2024

சோபகிருது மாசி 21 | MAR - MON திங்கள் | ஷ:பான் 22 | இராசிபலன்

மேஷம் - தோல்வி, ரிஷபம் - பெருமை, மிதுனம் - நட்பு, கடகம் - அமைதி, சிம்மம் - வெற்றி, கன்னி - புகழ், துலாம் - ஜெயம், விருச்சி - கஷ்டம், தனுசு - ஆக்கம், மகரம் - இன்பம், கும்பம் - உயர்வு, மீனம் - லாபம்

நினை விதைத்தவன் நினை அறுப்பான்

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

வாழ்க்கையில்
எல்லாவற்றையும்
செய்துமுடிக்க
வேண்டும் என்று
நினைப்பவன்
எதையுமே செய்து
முடிக்க மாட்டான்.

புதுக்கோட்டையில் மிகப்பெரிய தங்க நகை ஷோரூம்
ஸ்ரீ பார்வதி'ஸ் ஜுவல்லர்ஸ்
தங்க நகை தயாரிப்பாளர்கள்
TS.No.3208 கீழராஜ வீதி, புதுக்கோட்டை - 1
Cell : 98433 07916,04322233544

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.5,940 | Rs. 6,480 |


# சிவகங்கை தொகுதியில் குக்கர் சின்னத்துடன் பிரச்சாரம் தொடங்கிய அமமுக



சிவகங்கை, மார். 4-
சிவகங்கை மக்களவைத்தொகுதியில் குக்கர் சின்னத்துடன் கூடிய பேனர்களை சுவர்களில்ஒட்டி அமமுக தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கியது.

மக்களவைத் தேர்தலில் திமுக, அதிமுக, பாஜக, நாம் தமிழர்கட்சியினர் 4முனை போட்டி இருக்கும் என கூறப்படுகிறது. மேலும் பாஜக கூட்டணியில் அமமுக சேர வாய்ப்புள்ளதால், அதற்கான பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

சிவகங்கை தொகுதியில் கடந்த தேர்தலில் அமமுக சார்பில் போட்டியிட்ட தேர்போகி பாண்டி 1,22,534 வாக்குகள் பெற்றார். இது 11.3 சதவீதம். இதனால் பாஜக கூட்டணியில் சிவகங்கை தொகுதியை தங்களுக்கு ஒதுக்க வேண்டுமென அமமுக கேட்டு வருவதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், கடந்த ஒரு மாதத்துக்குள் 2 முறை சிவகங்கை மாவட்டத்துக்கு வந்த டிடி.வி.தினகரன், தான் இந்தமுறை போட்டியிட விரும்பவில்லை என தெரிவித்தார். ஆனால் கட்சி நிர்வாகிகள் விரும்பினால் போட்டியிடுவது குறித்து முடிவு செய்யப்படும் என்றும் கூறினார்.

அமமுக சார்பில் டி.டி.வி. தினகரன் தான் போட்டியிட போவதாகவும், இல்லாவிட்டால் கடந்த முறை போட்டியிட்ட மாவட்டச் செயலாளர் தேர்போகி பாண்டி நிறுத்தப்படலாம் என்றும் அக்கட்சியினர் கூறி வருகின்றனர்.

ஆனால் பாஜக வலுவாக உள்ள 9 தொகுதிகளில் சிவகங்கையும் ஒன்று. அதனால் இந்த தொகுதியை விட்டு கொடுக்க மாட்டோம் என பாஜகவினர் கூறி வருகின்றனர். இந்நிலையில் சிவகங்கை தொகுதியில் தேவகோட்டை பகுதியில் குக்கர் சின்னத்துடன் பேனர்களை சுவர்களில் ஒட்டி அமமுகவினர் தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கி உள்ளனர்.

இது குறித்து அமமுகவினர் சிலர் கூறியதாவது: டிடிவி.தினகரன் போட்டியிட்டால் சிவகங்கை தொகுதியில் அதிகளவில் உள்ள அவரது சமுதாய மக்களின் வாக்குகள் பெரும்வாரியாக அவருக்குத்தான் கிடைக்கும். பழைய தொடர்பில் அதிமுக வினரிடம் இருந்தும் ஒத்துழைப்பு கிடைக்கும். காங்கிரஸில் கார்த்தி சிதம்பரம் போட்டியிட்டால் அவருக்கு எதிராக போர்க்கொடி தூக்கியவர்களின் ஆதரவும் டிடிவி.தினகரனுக்கு கிடைக்க வாய்ப்புள்ளது.

அவர் போட்டியிட விரும்பா விட்டால், தேர்போகி பாண்டிக்கு சீட் கிடைத்து விடும். அவர் கடந்த முறை ஒரு லட்சத்துக்கு மேல் வாக்குகள் பெற்றுள்ளார். தற்போது கூட்டணி முடிவாகா விட்டாலும், கட்சி சின்னத்தை பேனர்கள், சமூக வலைதளங்கள் மூலம் விளம்பரப்படுத்தி வருகிறோம் என்று கூறினர்.



சென்னை ராயபுரம் மீனாட்சியம்மன் பேட்டை, தொப்பை தெருவில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெ.ஜெயிலலிதாவின் 76வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. மாவட்ட பிரதிநிதி கே. என். ராகேஷ் ஏற்பாட்டில், வட்ட செயலாளர் டி.எல். தியாகராஜன் தலைமையில், பகுதி செயலாளர் ஏ.டி. அரசு முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் டி. ஜெயக்குமார் கலந்துகொண்டு கட்சி கொடியெற்றி, கேக் வெட்டி, இனிப்புகள், அன்னதானம், நலத்திட்ட உதவிகளை பொதுமக்களுக்கு வழங்கினார். உடன் அமைப்பு செயலாளர் ராயபுரம் ஆர். மனோ கலந்து கொண்டார். உடன் பகுதி துணை செயலாளர் கே. குமுதா மற்றும் கட்சியின் முக்கிய நிர்வாகிகள், தொண்டர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# மீண்டும் நவாஸ் கனி மீண்டும் ஏணி சின்னம்

## காதர் மொகிதீன் அறிவிப்பு



ராமநாதபுரம் ,மார்.4-
ராமநாதபுரம் மக்களவைத் தொகுதியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி வேட்பாளராக நவாஸ் கனி மீண்டும் போட்டியிடுவார் என அக்கட்சியின் தேசியத் தலைவர் காதர் மொகிதீன் தெரிவித்தார்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மாநில பொதுக்குழு கூட்டம் திருச்சியில் நடைபெற்றது. கட்சியின் தேசியத் தலைவர் கே.எம். காதர் மொகிதீன் தலைமை வகித்தார். மாநில பொதுச் செயலாளர் கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், மாநிலப் பொருளாளர் ஷாஜகான், மாநில துணைத் தலைவரும், எம்.பியுமான கே.நவாஸ் கனி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து செய்தியாளர்களிடம் காதர் மொகிதீன் கூறியதாவது: திமுக கூட்டணியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிக்கு ராமநாதபுரம் தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த முறை இந்தத் தொகுதியில் வெற்றி பெற்று, மக்களின் நன்மதிப்பை பெற்றுள்ள நவாஸ் கனி எம்.பி மீண்டும் ஏணி சின்னத்தில் போட்டியிடுவார். தேர்தல் பணியாற்றுவதற்காக நிதிக்குழு, பணிக்குழு, பிரச்சாரக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

தமிழகம், புதுச்சேரியில் 40 தொகுதிகளிலும் திமுக தலைமையிலான கூட்டணி வெற்றிபெறும். இந்திய அளவில் அரசியல் மாற்றத்தையும், ஆட்சி மாற்றத்தையும் இண்டியா கூட்டணி ஏற்படுத்தும்.

திமுக கூட்டணியில் மனித நேய மக்கள் கட்சிக்கு தொகுதி ஒதுக்கினால் இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் வரவேற்போம். இவ்வாறு தெரிவித்தார்.

# பாஜகவுக்கு தாமரை சின்னம் ஒதுக்கியதை எதிர்த்து வழக்கு தொடர்வேன் – சீமான் காட்டம்



சென்னை, மார். 4-
மக்களவைத் தேர்தல் முடிந்தபிறகு, பாஜகவுக்கு தேர்தல் ஆணையம் தாமரை சின்னம் ஒதுக்கியதை எதிர்த்து வழக்குத் தொடர்வேன், என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

சென்னையில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம் நாம் தமிழர் கட்சிக்கு கரும்பு விவசாயி சின்னம் மறுக்கப்படுவது குறித்து கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், "பாஜகவின் தாமரை சின்னத்தை ஒழிக்க வேண்டும். நிச்சயமாக இந்த தேர்தல் முடிந்தபிறகு, வழக்குத் தொடர்வேன். அதற்கு தேர்தல்ஆணையம்பதில் சொல்ல வேண்டும். பள்ளிக் கூடங்களில் இருந்து நாட்டின் தேசிய மலர் தாமரை என்பதை படித்து வருகிறோம். அதை எப்படி தேர்தல் ஆணையம்ஒருதேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிக்கான சின்னமாக ஒதுக்கியது.

நாம் தமிழர் கட்சிக்கு மயில் சின்னத்தை ஒதுக்கும்படி கேட்டபோது, அது தேசிய பறவை என்றுகூறி தேர்தல் ஆணையம் மறுத்துவிட்டது. ஆனால், பாஜகவுக்கு எப்படி தாமரை சின்னத்தை ஒதுக்கியது. ஒன்று தேசிய மலராக தாமரையை அறிவித்துவிட்டு, பாஜகவின் சின்னத்தை எடுக்க வேண்டும். அல்லது தாமரையை பாஜகவுக்கு சின்னமாக அறிவித்து, தேசிய மலராக பிற மலரை தேர்தல் ஆணையம் அறிவிக்க வேண்டும்.

இது அநீதி. ஒரு அரசியல் கட்சி நாட்டின் தேசிய மலர் என்று கூறப்படுவதை எப்படி கட்சி சின்னமாக தாங்கி நிற்கிறது. இதுதான் ஜனநாயகமா? பல ஆண்டுகளாக ஆட்சி செய்த திமுக, அதிமுக, பாஜக கூட்டணி தேடி அலைகின்றனர். தமிழகத்தில் நாங்கள்தான் பெரிய கட்சி. 40 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிடுகிறோம். 234 தொகுதிகளிலும் போட்டியிடுகிறோம். மக்களை நம்பி தேர்தலில் நிற்பதற்கு ஒருவருக்கும் துணிவில்லை. இன்னும் தமிழகத்தில் யார் எந்தப்பக்கம் செல்லப்போகின்றனர் என்று தெரியவில்லை" என்று அவர் கூறினார்.

# அரசியலைவிட்டு விலகுவதாக முன்னாள் மத்திய அமைச்சர் ஹர்ஷ் வர்தன் அறிவிப்பு



புதுடெல்லி , மார். 4-
முன்னாள் மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தன் அரசியலைவிட்டு விலகுவதாக அறிவித்துள்ளார்.

வரும் மக்களவைத் தேர்தலை முன்னிட்டு 195 வேட்பாளர்கள் அடங்கிய முதற்கட்டப் பட்டியலை பாஜக சனிக்கிழமை வெளியிட்டது. இதில், டெல்லியின் தற்போதைய எம்பிக்களான ஹர்ஷ்வர்தன், பர்வேஷ்வர்மா, ரமேஷ் பிதுரி, மீனாட்சி லேகி ஆகிய 4 பேருக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. அவர்கள் போட்டியிட்ட தொகுதிகளில் புதிய முகம்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அரசியலைவிட்டே விலகுவதாக முன்னாள் மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தன் தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள எக்ஸ் பதிவில், முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக தேர்தல் அரசியலில் இருந்திருக்கிறேன். ஐந்துமுறை சட்டமன்றத் தேர்தல்களிலும், இரண்டுமுறை மக்களவைத் தேர்தல்களிலும் மகத்தான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருக்கிறேன். கட்சியிலும், டெல்லி மாநில அரசிலும், மத்திய அரசிலும் பல மதிப்புமிக்க பதவிகளை வகித்துள்ளேன்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு கான்பூரில் உள்ள GSVM மருத்துவக் கல்லூரியில் MBBS படிப்பில் சேர்ந்தபோது, ஏழைகளுக்கு உதவ வேண்டும், மனித குலத்துக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதே எனது குறிக்கோள். இதயத்தில் நான் ஒரு ஸ்வயம்சேவகர்(ஆர்எஸ்எஸ் உறுப்பினர்). வரிசையில் கடைசியாக நிற்கும் மனிதனுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற தீன் தயாள் உபாத்யாயாவின் தத்துவத்தின் தீவிர ரசிகனாக இருந்தேன். அப்போதைய ஆர்எஸ்எஸ் தலைமையின் வற்புறுத்தலின் பேரில்தான் நான் தேர்தல் களத்தில் குதித்தேன். எனக்கு அரசியல் என்பது நமது மூன்று முக்கிய எதிரிகளான வறுமை, நோய் மற்றும் அறியாமை ஆகியவற்றை எதிர்த்துப் போராடுவதற்கான வாய்ப்பே.


எனது அரசியல் பணி என்பது, வருத்தமில்லாமல் சாமானியர்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற எனது ஆர்வத்தை தணித்த ஒரு அற்புதமான இன்னிங்ஸ். டில்லி மாநில சுகாதாரத்துறை அமைச்சராகவும், இரண்டு முறை மத்திய சுகாதாரத்துறை அமைச்சராகவும் பணியாற்றினேன். அவை என் மனதுக்கு நெருக்கமான ஒரு விஷயம். போலியோ இல்லாத இந்தியாவை உருவாக்குவதற்கு உழைக்கவும், கோவிட்-19 உடன் போராடிய கோடிக்கணக்கான நமது நாட்டு மக்களின் ஆரோக்கியத்தைப் பேணவும் உதவக்கூடிய அரிய வாய்ப்பு அதன்மூலம் கிடைத்தது. மூன்று தசாப்தங்களாக நீடித்த இந்த குறிப்பிடத்தக்க பயணத்திற்கு பங்களித்த எனது கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் நன்றி.

இந்திய வரலாற்றில் மிகவும் ஆற்றல் மிக்க பிரதமரான நரேந்திர மோடியுடன் நெருக்கமாகப் பணியாற்றியதை ஒரு பெரிய பாக்கியமாகக் கருதுகிறேன். அவர் மீண்டும் ஆட்சிக்கு வர நாடு வாழ்த்துகிறது. புகையிலை மற்றும் போதைப்பொருள் பயன்பாட்டுக்கு எதிராகவும், காலநிலை மாற்றத்திற்கு எதிராகவும், எளிய மற்றும் நிலையான வாழ்க்கை முறைகளை கற்பிப்பதற்காகவும் எனது பணிகளை நான் தொடர்வேன். நான் செல்கிறேன். என்னால் காத்திருக்க முடியாது. நான் உறங்குவதற்கு முன் பல மைல்கள் செல்ல வேண்டும். எனக்கு ஒரு கனவு இருக்கிறது. உங்கள் ஆசீர்வாதம் எப்போதும் என்னுடன் இருக்கும் என்று எனக்குத் தெரியும். டெல்லியின் கிருஷ்ணா நகரில் உள்ள எனது ENT கிளினிக் எனக்காக காத்திருக்கிறது என தெரிவித்துள்ளார்.



சென்னை எண்ணூர் கத்திவாக்கம் மார்க்கெட் பகுதியில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 76 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு திருவொற்றியூர் மேற்கு பகுதி _ சார்பில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே. குப்பன் மற்றும் ஏழாவது வார்டு மாமன்ற உறுப்பினர் கார்த்திக் தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம், மற்றும் ஏழை எளிய மக்களுக்கு 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது, இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மாதவரம் மூர்த்தி, அமைப்புச் செயலாளர் ராயபுரம் மனோ, ஆகியோர், கலந்துகொண்டு ஏழை எளிய பெண்களுக்கு புடவை மற்றும் மாணவர்களுக்கு நோட்டு புத்தகம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினர். இதில் வடசென்னை நாடாளுமன்ற வேட்பாளர் ராயபுரம் ஆர்.மனோவை ஆதரித்து இரட்டை இலை சின்னத்திற்கு வாக்களிக்குமாறு கேட்டு கொண்டனர். இதில் பேசிய ராயபுரம் மனோ எம்ஜிஆரின் படகோட்டி பட பாடலை பாடி மீனவர்கள் படும் துன்பத்தை தீர்க்க இரட்டை இலை சின்னத்திற்கு வாக்களிக்குமாறு கேட்டு கொண்டார். இதில் அதிமுக நிர்வாகிகள் வட்ட பிற அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் இருந்தனர்,

# புதுக்கோட்டை மாவட்ட நேரு யுவ கேந்திரா சார்பில் மாவட்ட அளவிலான இளையோர் பாராளுமன்றம்



புதுக்கோட்டை, மார்.4-
இந்திய அரசு புதுக்கோட்டை மாவட்ட நேரு யுவ கேந்திரா சார்பில் மாவட்ட அளவிலான இளையோர் பாராளுமன்றம் வேப்பங்குடி புஷ்கரம் வேளாண் அறிவியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு புதுக்கோட்டை நேரு யுவ கேந்திரா மாவட்ட இளையோர் அலுவலர் ஜோயல் பிரபாகர் தலைமை வகித்தார். புஷ்கரம் வேளாண் அறிவியல் கல்லூரி செயலாளர் ராஜாராம் மற்றும் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன முதுநிலை விஞ்ஞானி முனைவர் ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

துவக்க விழாவில் தமிழ்ச் செம்மல் கவிஞர் தங்கம்மூர்த்தி கலந்து கொண்டு விழாவினைத் துவக்கிவைத்து "பெண்கள் மேம்பாடு" என்ற தலைப்பில் உரையாற்றினார். அவர் தனதுஉரையில் "பெண்கள் யானையைப் போல் வலிமை மிக்கவர்கள். ஆனாலும் வாழ்நாள் முழுவதும் ஆண்கள் என்ற பாகனுக்கு கட்டுப்பட்டே நடக்க வேண்டும் என்ற ஒரு மனப்பான்மையைத்தான் நம் சமூகம் அவர்கள் மீது திணித்து வைத்துள்ளது எனவும் தாயாக சகோதரியாக மனைவியாக உறவினர்களாக நல்ல நட்பாக நம்முடனேயே வாழும் பெண்களை நாம் அனைவரும் போற்ற வேண்டும் எனவும், பிறந்த வீட்டில் வளரும் பெண் புகுந்த வீட்டில் தேய்கிறாள் எனும் நிலை நம் சமூகத்திலிருந்து மறைய வேண்டும் எனவும் எடுத்துக் கூறினார். இன்றைய நமது இளைய சமுதாயம் இந்த நல்ல மாற்றத்தினை நம் சமூகத்தில் கொண்டு வர வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். தொடர்ந்து புஷ்கரம் வேளாண் அறிவியல் கல்லூரியின் பேராசிரியர் முனைவர் ஆறுமுகம் சிறு தானியங்களின் சிறப்பியல்புகள் எனும் தலைப்பில் கருத்துரை ஆற்றினார்.

விழாவில் கல்லூரி மாணவர்கள் மற்றும் நேரு யுவ கேந்திரா இளையோர் பங்கேற்ற மாதிரி இளையோர் பாராளுமன்றம் நடைபெற்றது. ஒரு மாணவர் சபாநாயகராக பங்கேற்க ஆளும் தரப்பாகவும் எதிர்த்தரப்பாகவும் 12 இளையோர் பங்கேற்று பல்வேறு அரசுத் திட்டங்கள் குறித்த சிறப்புக்களையும் அவற்றின் மீதான தரமான விமர்சனங்களையும் எடுத்துக் கூறி விவாதித்தனர் தொடர்ந்து மாமன்னர் கல்லூரி தேர்வு கட்டுப்பாட்டாளர் பேராசிரியர் முனைவர் கணேசன், மாவட்ட குழந்தைகள் நலக்குழும தலைவர் சதாசிவம், தபால் துறை கண்காணிப்பாளர் பொன் முருகேசன், தமிழ்நாடு அறிவியல் இயக்க செயலாளர் வீரமுத்து, அசாம் மாநிலத்தைச் சார்ந்த வேளாண் விஞ்ஞானி மிலன் மற்றும் புத்தாஸ் மார்சியல் ஆர்ட்ஸ் அசோஷியேசன் நிறுவனர் சேது கார்த்திகேயன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பரிசளிப்பு விழாவில் பங்கேற்ற புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை. முத்துராஜா இளையோர் மாதிரி பாராளுமன்றத்தில் பங்கேற்ற மாணவர்கள் மற்றும் இளையோர் அனைவருக்கும் நேரு யுவகேந்திரா சார்பில் நினைவு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கி அவர்களை வாழ்த்திப் பாராட்டினார். நிகழ்ச்சியில் மாணவ, மாணவியர் மற்றும் நேரு யுவகேந்திராவை சார்ந்த இளையோர் சுமார் 750 க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். முன்னதாக விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் புஷ்கரம் வேளாண் அறிவியல் கல்லூரி துணை முதல்வர் முனைவர் சாந்தி வரவேற்றார். நிறைவாக நேரு யுவ கேந்திரா திட்ட உதவி அலுவலர் முனைவர் நமச்சிவாயம் அனைவருக்கும் நன்றி கூறினார். நிகழ்ச்சியை புஷ்கரம் வேளாண் கல்லூரி அலுவலர்களுடன் நேரு யுவ கேந்திராவின் தேசிய இளையோர் தொண்டர்கள் லாவண்யா ஸ்வர்ணா மற்றும் ரம்யா ஆகியோர் இணைந்து சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

# ம.கொத்தங்குடி அரசு பள்ளி ஆண்டு விழாவில் 2024–2025 கல்வி ஆண்டுக்கான மாணவர்கள் சேர்க்கை

காட்டுமன்னார் கோயில், மார்.4–



கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் அருகே ம.கொத்தங்குடி ஊராட்சியில் அரசு தொடக்கப்பள்ளி ஆண்டு விழாவில் சிறப்பாக நடைபெற்றது நிகழ்ச்சிக்கு ஊராட்சிமன்றத்தலைவர் குணபாலன் தலைமை தாங்கினார்.

சிறப்பு அழைப்பாளராக காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் சிந்தனை செல்வன் பங்கேற்று கிராம பொதுமக்கள் மற்றும் பெற்றோர் மத்தியில் உரை நிகழ்த்தினார் இதில் கல்வியால் மட்டும் தான் சமூக கட்டமைப்பை மாற்ற முடியும் எனவே மாணவ மாணவிகள் கல்வியை கண்களாக பாவித்து கற்க வேண்டும் என அறிவுரை வழங்கினார்.

மேலும் காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற தொகுதியில் பள்ளி வளர்ச்சிக்கு சட்டமன்ற உறுப்பினர் நிதியை வழங்குவதில் பெருமைப் படுகிறேன் என்று கூறினார் தமிழ்த் தாய் வாழ்த்துக்களோடு தொடங்கிய இந்நிகழ்வில் ஆசிரியர் விடுதலை ஜெயசீலன் வரவேற்பு ஆற்றினார். தலைமை ஆசிரியர் விஜயகுமாரி, வட்டார கல்வி அலுவலர்கள் நடராஜன், குமார், மோகன், ஆசிரியர்கள் ஜெயகாந்தன், மகாராஜன் உள்ளிட்டோர் ஆசிரியர்கள் பொதுமக்கள் பெற்றோர்கள் திரளாக கலந்து கொண்டனர்

# கொருக்குப்பேட்டை பாரதி நகர் அருள்மிகு பத்ரகாளியம்மன் ஆலயம் கும்பாபிஷேக விழா: நிர்வாகிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்

சென்னை, மார். 4–



சென்னை, கொருக்குப்பேட்டை பாரதி நகரில் அமைந்துள்ள அருள்மிகு பத்ரகாளியம்மன் ஆலயத்தில் ராஜகோபுரம் புதிதாக கட்டப்பட்டு ஜீர்ணோதாரண அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

மூலவரான பத்ரகாளி அம்மனுக்கும் மற்ற பரிவாரதேவதைகளுக்கும் புனித நீர் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் 1000க்கும் மேற்பட்ட பக்தர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

மேற்கண்ட இந்த நிகழ்ச்சிகளில் பல்வேறு தரப்புகளை சார்ந்த முக்கிய பிரமுகர்கள் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியை சிறப்பாக நடைபெற காரணமாக இருந்த நிர்வாகிகளுக்கு நேற்று பாராட்டுவிழா சென்னை கொருக்குப்பேட்டை பாரதி நகர் நாடார் திருமண மண்டபத்தில் நடை பெற்றது. இந்த விழாவில் சிறப்பு அழைப்பாளராக வடசென்னை வியாபாரிகள் சங்க தலைவர் ராபர்ட், மற்றும் ராம் குமார், ஆகியோர் கலந்து கொண்டு கீழ்கண்ட நிர்வாகிகள் அனைவருக்கும் கேடயம், சால்வை, நினைவு பரிசு வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பாரதி நகர் நாடார் உறவின் முறை நிர்வாகிகள் பி.மணிவண்ணன், ஆர்.சீனிவாசன், ஜி.சீனிவாசன், ஆலய அறங்காவலர் நிர்வாகிகள் கே.ராஜேந்திரன் சி.சிவகுமார், ஜி.பெரியசாமி, மற்றும் நிர்வாகிகள் டி.பிச்சைமணி, என்.கணேசன், டி.சீனிவாசன், கே.விஜயகுமார், எஸ்.சிவராஜ், எஸ்.கார்த்திக், எஸ்.சுரேஷ், வி.கார்த்திக் மற்றும் சி.ரவிச்சந்திரன், கே.ஜெயக்குமார், சி.விநாயகமூர்த்தி, எம்.தனச்சந்திரன், கே.செல்வம், எம்.பிரபு, என்.ரவிசங்கர், எஸ்.மகேஸ்வரன் ஆலய பூசாரி எஸ்.நாகராஜ் மற்றும் ஆலயமகளிரும் அனைத்து நிகழ்ச்சிகளையும் ஒருங்கிணைத்து நடத்திய அனைவரும் கௌரிக்கப்பட்டனர்.

# தொழில் முனைவோருக்கான வழிகாட்டுதல் நிகழ்ச்சி

தி.மலை. மார். 4–



திருவண்ணாமலை அடுத்த ஆடையூர் புனித தொன்போஸ்கோ சிகரம் மையத்தில் துரும்பர் விடுதலை இயக்கம் சார்பில் அதன் ஒருங்கிணைப்பாளர் அருட்பணி.அருள் வளன் தலைமையில் அருட்பணி. ஆன்டோ முன்னிலையில் பட்டியலின இளைஞர்கள், இளம் பெண்களுக்கான அண்ணல் அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் தொழில் தொடங்குவதற்கான வழிகாட்டுதல் கருத்தரங்கு நடைபெற்றது.

இதில் மாவட்ட தொழில் மைய அலுவலர்கள் எழிலரசு ,குப்புசாமி, முன்னோடி வங்கி மேலாளர் மற்றும் அம்ரோஸ், DICCI ஒருங்கிணைப்பாளர் பத்தியாவரம் அன்புதாஸ் ஆகியோர் கலந்து கொண்டு அண்ணல் அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் மாவட்ட தொழில் மையத்தின் மூலம் தொழில் தொடங்குவதற்கான வழிமுறைகளைப் பற்றி எடுத்துக் கூறினார்கள் .

ரெனி ஜென்னா அனைவரையும் வரவேற்றார். பல கிராமங்களில் இருந்து வந்திருந்த நூற்றுக்கும் அதிகமான இளைஞர்கள் இளம் பெண்கள் இதில் கலந்து கொண்டு பலனடைந்தனர்.



ஆர்.கே.நகர் தொகுதியில் 71–வது பிறந்தநாளையொட்டி 41–(அ) வட்டத்திற்குட்பட்ட அன்னை சத்யா நகர் பெரியார் சாலையில் திமுக தோழர்களுக்கு புத்தாடைகள் மற்றும் பொது மக்கள் 200 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி பகுதி பிரதிநிதி ஆர்.வி.மாசானதுரை தலைமையில் நடைபெற்றது. வட்ட திமுக செயலாளர் ஆர்.ஏ.எம்.சசிகுமார் முன்னிலையில் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் ஆர்.கே.நகர் பகுதி செயலாளர்கள் எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், இரா.லட்சுமணன், பெரு நகர சென்னை மாநகராட்சி 4–வது மண்டல குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன் , ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்கினர். இந்நிகழ்வில் வட்ட திமுக செயலாளர் கி.தேவன், மாமன்ற உறுப்பினர் பா.விமலா, வட்ட நிர்வாகிகள் ஜி.ராஜேந்திரன், வீ.மணிமாறன், எ துணை அமைப்பாளர்கள், இறுதியாக சார்பு மன்ற செயலாளர் எஸ்.ஆர்.வெள்ளைதுரை, 61–வது பாக பொறுப்பாளர் பெ.ரமேஷ் நன்றி கூறினார்.



தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வேலூர் மாவட்டம், காட்பாடி, விருதம்பட்டில் உள்ள மாவட்ட கல்வி அலுவலகத்தில் (தனியார் பள்ளிகள்) ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மணிமொழி, தனியார் பள்ளிகள் மாவட்ட கல்வி அலுவலர் ரவி உடன் இருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் மாவட்ட திமுக செயலாளர் மாதவரம் சுதர்சனம் எம்எல்ஏ வழிகாட்டுதலின்படி, திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் ஏற்பாட்டில் திருவொற்றியூர் அஜாக்ஸ் மெட்ரோ ரயில் நிலையம் அருகில் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது இவ்விழாவில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி எம்பி கலந்து கொண்டு ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு பிரியாணி உணவை வழங்கினார்.



செங்கல்பட்டு மாவட்டம் சிங்கப்பெருமாள் கோவில் அடுத்த திருக்கச்சூரில் மருந்தீஸ்வரர் ஆலயம் அருகே உள்ள குழந்தைவேல் சித்தர் 69 ஆம் ஆண்டு குருபூஜை முன்னிட்டு பாராயணமும் அன்னதானமும் நடைபெற்று வருகிறது இதில் குருமார்கள், சிவனடியார்கள், மற்றும் திருக்கச்சூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆறுமுகம் மற்றும் பக்தர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டத்தில் போலியோ சொட்டு மருந்து முகாமை மாவட்ட ஆட்சித் தலைவர் சுப்புலெட்சுமி, வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட அம்பேத்கர் நகர் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் தொடங்கி வைத்தார். சுகாதார மையத்தையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வின் போது வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், ஆணையாளர் ஜானகி ரவீந்திரன், இணை இயக்குநர் (தொற்று நோய்கள்) மரு. செந்தில்குமார், துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள் ) மரு. பானுமதி, மாநகர நல அலுவலர் மரு. கணேஷ் உட்பட பலர் உடன் இருந்தனர்.



புதுச்சேரி அரசு சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை மூலம் கோட்டுச்சேரி ஆரம்ப சுகாதார நிலையத்தில் 1 முதல் 5வயது வரை உள்ள குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் நிகழ்வில் நெடுங்காடு கோட்டுச்சேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சந்திர பிரியங்கா கலந்து கொண்டு குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கி துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர், ஊழியர்கள், குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

## ஆரணி ஆரம்ப சுகாதார நிலையத்தில்

# போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாமை பொன்னேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர் துவக்கி வைத்தார்

ஊத்துக்கோட்டை, மார்.4–



ஆண்டுதோறும் மார்ச் 3–ம் தேதி போலியோ இல்லாத உலகத்தை உருவாக்கும் வகையில் போலியோ தினமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.இந்நிலையில், திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி பஜார் வீதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை சார்பில் நேற்று ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு இரண்டு சொட்டுக்கள் போலியோ மருந்து வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு, ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் திலக் தலைமை தாங்கினார்.செவிலியர் ரேகா, ஆரணி பேரூர் திமுக செயலாளர் பி.முத்து, பொருளாளர் கு.கரிகாலன், பேரூராட்சி மன்ற துணைத்தலைவர் வழக்கறிஞர் சுகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில், பொன்னேரி தொகுதி சட்டமன்ற காங்கிரஸ் உறுப்பினர் துரை சந்திரசேகர் கலந்து கொண்டு குழந்தைகளுக்கு இரண்டு சொட்டுக்கள் போலியோ மருந்து வழங்கி முகாமை துவக்கி வைத்தார்.

இதன் பின்னர்,இந்தத் துணை சுகாதார நிலையத்துக்கு உட்பட்ட 20 இடங்களில் குழந்தைகளுக்குபோலியோ சொட்டு மருந்து வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. மேலும்,பூதூர் வட்டார மருத்துவமனைக்கு உட்பட்ட பகுதிகளில் வட்டார சுகாதார மேற்பார்வையாளர் ஜெகநாதலு ஏற்பாட்டில் சொட்டு மருந்து வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.



செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் வட்டம் சிறுதாவூர் கிராமத்தில் செயல்படும் அரசினர் உயர்நிலை பள்ளியில் படிக்கும் பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு அரசு பொதுத் தேர்வை எளிதாக எதிர்கொள்ளும் பொருட்டு இது நம்ம கடை என்ற இலவச துணிக்கடையை நடத்தி வருபவரும் சமூக சேவகரமான குமரப்பன் மற்றும் அவருடைய துணைவியார் நித்திய கல்யாணி ஆகியோர் 44 மாணவர்களுக்கு பேனா பென்சில் ஸ்கேல் அடங்கிய ஜியாமன்ரி பாக்ஸ் வழங்கி ஆசி உரை வழங்கினார்கள். முன்னதாக இந்நிகழ்ச்சிக்கு சிறுதாவூரின் சமூக சேவகர் ராமச்சந்திரன் முன்னிலை வகித்தார் நிகழ்ச்சியை பள்ளியின் உதவி தலைமை ஆசிரியை சோபியா வரவேற்று பேசினார். நிகழ்ச்சியில் செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஒன்றியம் நந்திவரம் கூடுவாஞ்சேரி அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் முதுகலை தாவரவியல் ஆசிரியர் குமார் மாணவர்கள் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வை பயமின்றி எழுதவும் அனைத்து மாணவர்களும் 100% தேர்ச்சி பெற்று பள்ளிக்கும் ஊருக்கும் பெருமை சேர்ப்பது எப்படி என்பது பற்றி விரிவாக சிறப்பு உரையாற்றினார். பின்பு சமூக நலம் விரும்பி சிராஜுதீன் பாய் மாணவர்களை வாழ்த்தினார இறுதியில் பள்ளியின் தமிழ் ஆசிரியர் மோகன் நன்றி உரையாற்றினார். விழா நாட்டுப்பண் பாட இனிதே நிறைவுற்றது.

# காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியில் போலியோ சொட்டு மருந்து முகாம்

காட்டுமன்னார் கோயில் மார். 4–



கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் பேரூராட்சி வளாகத்தில் போலியோ சொட்டு மருந்து முகாம் நடைபெற்றது.

முகாமிற்கு வட்டார மருத்துவர் வெங்கடேசன் தலைமை தாங்கினார் காட்டுமன்னார்கோயில் பேரூராட்சி மன்ற தலைவர் கணேசமூர்த்தி குத்து விளக்கு ஏற்றி போலியோ சொட்டு மருந்து முகாமை துவக்கி வைத்தார் நிகழ்ச்சியில் மருத்துவர் அருள்மொழி தேவன் காட்டுமன்னார்கோயில் கேலக்ஸி ரோட்டரி கிளப் துணை ஆளுநர் ரூபிபாஸ்கர் தலைவர் நாகராஜ் செயலாளர் குரு பிரசாத் ஆத்ம லிங்கம் வட்டார சுகாதார ஆய்வாளர் ஜெயச்சந்திரன் பேரூராட்சி பணியாளர்கள் சுகாதார துறை பணியாளர்கள் கலந்து கொண்டு குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கப்பட்டது

# காட்டுமன்னர்கோவில் பேரூராட்சியில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு திட்ட சிறப்பு முகாம்

காட்டுமன்னார் கோவில், மார்.4–



கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் பேரூராட்சி சார்பில் உதவி பெறும் கலைமகள் தொடக்கப் பள்ளி வளாகத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் பயனாளிகள் பதிவு செய்யும் சிறப்பு முகாம் நடைபெற்றது.

காட்டுமன்னார் கோயில் வட்டாட்சியர் சிவக்குமார் அனைவரையும் வரவேற்றார் காட்டுமன்னார்கோயில் பேரூராட்சி மன்ற தலைவர் கணேசமூர்த்தி தலைமை தாங்கினார் சிறப்பு அழைப்பாளராக காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் சிந்தனை செல்வன் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார் மாவட்ட திட்ட அலுவலர் இளங்கோவன் வாழ்த்துரை வழங்கி முதலமைச்சர் விரிவான மருத்துவ காப்பீடு திட்டம் தமிழகம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் ஆண்டு வருமானம் ஒரு லட்சத்து இருபது ஆயிரம் மிகாமல் உள்ள குடும்பத்தினருக்கு காப்பீடு அட்டை வழங்கப்படுகிறது தமிழகம் முழுவதும் உள்ள அரசு மருத்துவமனை 600, மற்றும் தனியார் மருத்துவமனை 860, மொத்தம் 1460 மருத்துவமனைகளில் ரூ.5 லட்சம் வரை இலவச சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 1.45 கோடி குடும்பத்தினர் பயன் பெற்று வருகின்றனர். நிகழ்ச்சியில் கல்வி குழு உறுப்பினர் முத்துசாமி ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் நிஜார் அஹமது ஜெய பாண்டியன் பேரூராட்சி மன்ற துணை தலைவர் ராஜேஸ்வரி மணிமாறன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் நிகழ்ச்சியில் கல்வி குழு உறுப்பினர்கள் கருணாநிதி பாலமணிகண்டன் மணவாளன் பூக்கடை செந்தில் ஆய்வாளர் துரைராஜ் வருவாய் ஆய்வாளர் தென்னரசு பேரூராட்சி உறுப்பினர்கள் மருத்துவத்துறை பணியாளர்கள் கிராம நிர்வாக அலுவலர்கள் காட்டுமன்னார்கோயில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டு மருத்துவ காப்பீடு திட்டம் பதிவு செய்து பயன்பெற்றனர். முடிவில் பேரூராட்சி செயல் அலுவலர் தங்க வேல் நன்றி தெரிவித்தார்.






▶ நாகப்பட்டினம் சிஎஸ்ஐ திடலில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டத்தில் நெடுஞ்சாலை மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றினார். தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் நாகப்பட்டினம் மாவட்ட பொறுப்பு அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை உரையாற்றினார். இதில் நாகப்பட்டினம் மாவட்ட திமுக செயலாளர் தமிழ்நாடு மீன் வளர்ச்சி திமுக தலைவர் கௌதமன், முன்னாள் அமைச்சர் தாட்கோ தலைவர் மதிவாணன், மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



▶ புதுக்கோட்டை நகராட்சி, காமராஜபுரம் 13-ஆம் வீதியில் உள்ள அங்கன்வாடி மையத்தில், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை சார்பில், 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாமினை, மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, நேற்று துவக்கி வைத்து, குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்தினை வழங்கினார். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, துணை இயக்குநர்கள் (சுகாதாரப்பணிகள்) மரு.ராம்கணேஷ் (புதுக்கோட்டை), மரு.நமச்சிவாயம் (அறந்தாங்கி), புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் ஐஸ்வர்யா, நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், நகர்மன்றத் துணைத் தலைவர் லியாகத் அலி, நகராட்சி ஆணையர் (புதுக்கோட்டை/அறந்தாங்கி (பொ)) ஷியாமளா, மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# அரியலூர் மாவட்டத்தில் நில வாழ் பறவைகள் கணக்கெடுப்பு பணி

அரியலூர்.மார்ச்.4-

அரியலூர் மாவட்டத்தில், நில வாழ் பறவைகள் கணக்கெடுப்பு பணியில் ஈடுபட்டவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு வனத்துறை சார்பில், அரியலூர் வன கோட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கும், நிலவாழ் பறவைகள் கணக்கெடுக்கும்பணி, கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்றது. அதில் மாவட்ட வன அலுவலர் தலைமையில் பங்கேற்று நடத்திய, கால்நடை மருத்துவர், கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் கல்லூரி மாணவ மாணவியருக்கு, பாராட்டு சான்று வழங்கும் விழா நடைபெற்றது. அரியலூர் மாவட்டம், திருமானூர் அருகே, கரைவெட்டி சரணாலயத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு,



மாவட்ட வன அலுவலர் த. இளங்கோவன் தலைமை வகித்தார், அரியலூர் வன சரக அலுவலர் முத்துமணி வரவேற்று பேசினார்.

அரியலூர் மாவட்ட அளவில், 20 இடங்களில் நடைபெற்ற கணக்கெடுப்பின்படி 70-க்கும் மேற்பட்ட வகையில், தூக்கணாங்குருவி, தேன் சிட்டு, மைனா, தவிட்டுக் குருவி, தேன் பருந்து, பெரிய பருந்து, கழுகு, பெரிய புள்ளி கழுகு, விரால் அடிப்பான் உள்பட, 6,100 பறவை இனங்கள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கணக்கெடுப்பில் முன்னின்று நடத்திய, திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி பேராசிரியர்கள் ஜெர்மியா, நேசராஜன், ஸ்வீட் பாய்ஸ் குழுவை சேர்ந்த இளவரசன் மற்றும், திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி, அரியலூர் அரசு கலைக்கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான சான்றிதழ்களை, அரியலூர் மாவட்ட வன அலுவலர் த.இளங்கோவன் வழங்கி பேசினார்.

இவ்விழாவில், அரியலூர் மாவட்ட அளவிலான வனத்துறையினர் பலரும் கலந்து கொண்டனர்.



▶ சென்னை தண்டையார்பேட்டை மண்டபம் 4 ராயபுரம் சட்டமன்ற தொகுதி வட்டம் 48. திருவொற்றியூர் நெடுஞ்சாலை ஆரம்ப சுகாதார நிலையத்திலலும், 38 வது வட்டம் அன்னை சந்தியா நகரில் ஒன்றாம் தெருவில் உள்ள ஆரம்ப சுகாதார மையத்திலும் நேரில் சென்று நேற்று உலக போலியோ தினத்தை முன்னிட்டு குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து 38வது மொத்தம் மாமன்ற உறுப்பினர் மற்றும் 4வது மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன். எம். சி. போலியோ சொட்டு மருந்து குழந்தைகளுக்கு வழங்கி துவக்கி வைத்தார் உடன் மருத்துவர் ஹேமலதா மருத்துவத்துறை அதிகாரிகள் மருத்துவர்கள் பொதுமக்கள் எஸ். கிருஷ்ணன் ப. தாமோதரன் மற்றும் கட்சியினர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



▶ அறந்தாங்கி பொதுக்கூட்டத்தில் சிறப்புரை ஆற்றுவதற்காக வருகை தந்த திமுக மாநில மருத்துவ அணி செயலாளர் டாக்டர். எழிலன் நாகநாதனை மருத்துவணி துணை செயலாளர் அண்ணாமலை ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர் மு.க.முத்துகருப்பன் உள்ளிட்டோர் வரவேற்றனர்.



▶ புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வார்டு எண் 10ல் புதிதாக கட்டப்பட இருக்கும் துணை சுகாதார நிலையம் அடிக்கல் நாட்டு விழாவில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா கலந்துகொண்டு சிறப்பித்தார். இந்நிகழ்வில் திமுக நகரக்செயலாளர் ஆ. செந்தில், நகர்மன்ற உறுப்பினர் பால்ராஜ், வட்டச் செயலாளர் முருகேசன், கழக நிர்வாகிகள் கலையரசன், ராம செல்வராஜ், புதுநகர் குமார், பழனிவேல், வெங்கடேசன், மார்ட்டின், வடிவேல், சோலை, மற்றும் நகர கழக நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



▶ புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்கம் சார்பாக காமராஜபுரம் 13 ஆம் வீதியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சங்கத் தலைவர் அசோகன் தலைமையில் தீவிர பல்ஸ் போலியோ சொட்டு மருந்து வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது, முன்னதாக வருகை தந்த அனைவரையும் சங்கச் செயலாளர் முத்தன் அரசகுமார் வரவேற்றார், நிகழ்ச்சியில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சங்கத் தலைவர் மாருதி கண.மோகன் ராஜா, வருங்கால தலைவர் தங்கராஜ், பொருளாளர் சங்கர் நன்றி கூறினார்.

# திருவரம்பூரில் பாஜக மருத்துவ முகாம் தனியார் மருத்துவமனையில் சிகிச்சையளித்த ஆர்.ஜி.ஆனந்த்

திருச்சி , மார்.4-

திருச்சிராப்பள்ளி பார்லிமென்ட் தொகுதிக்குட்பட்ட திருவரம்பூர் சட்டமன்றத்தை சார்ந்த துவாக்குடியில் பாரதிய ஜனதா கட்சி சார்பில் மருத்துவ முகாம் பாராளுமன்ற இணை அமைப்பாளரும் மாநில செயற்குழு உறுப்பினருமான டாக்டர் ஆர்.ஜி.ஆனந்த் தலைமையில் நடைபெற்றது.

12 மருத்துவர்கள் 3 செவிலியர்கள் மற்றும் ஆம்புலன்ஸ் வசதியுடன் நடத்தப்பட்ட இம்மருத்துவ முகாமில் 300க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட்டு



மருந்து மாத்திரைகள், டானிக் வகைகள் மற்றும் பிசியோதெரபி கருவிகள் இலவசமாக வழங்கப்பட்டன. உள் நோயாளியாக மருத்துவமனையில் தங்கி அவசரசிகிச்சை பெறவேண்டிய கட்டாயத்தில் இருந்த பயனாளிகள் 8 பேரை கண்டறிந்த டாக்டர் ஆர்.ஜி.ஆனந்த் தனது சொந்த செலவில் தனியார் மருத்துவமனையில் சேர்த்தார்.பாரதிய ஜனதா கட்சியின் புதுமையான இந்த அணுகுமுறையை அப்பகுதி மக்கள் மிகவும் வெகுவாக வரவேற்று பாராட்டினர்.

# அறந்தாங்கி ரோட்டரி சங்கங்கள் சார்பில் போலியோ சொட்டு மருந்து

அறந்தாங்கி,மார்.4-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் இயங்கி வரும் அறந்தாங்கி ரோட்டரி கிளப், அறந்தாங்கி தி ஃபோர்ட் சிட்டி ரோட்டரி கிளப், அறந்தை ப்ரண்ட்ஸ் ரோட்டரி கிளப் மற்றும் அறந்தாங்கி நகராட்சி நிர்வாகம் இணைந்து போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம் நடத்தினர்.

அறந்தாங்கி ரோட்டரி கிளப் தலைவர் செந்தில் தலைமையில் நகர்மன்ற தலைவர் இரா.ஆனந்த் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு வழங்கி சிறப்பு முகாமை துவங்கிவைத்தார். ரோட்டரி மாவட்ட முன்னாள் துணை ஆளுநர் சுரேஷ், ரோட்டரி மாவட்ட துணை செயலாளர் தங்கதுரை,



அமரகெங்கன், மருத்துவர் சுரேஷ், ரோட்டரி செயலாளர் இப்ராம்ஷா, முனைவர் முபாரக் அலி, நகர்மன்ற உறுப்பினர்கள் துளசிராமன், காசிநாதன், செல்வம், அசாருதீன், ஸ்ரீவித்யா, மகேஸ்வரி ஆகியோர் கலந்துகொண்டு அறந்தாங்கி பேருந்து நிலையத்தில் இருந்த நூறு குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்தும் இனிப்புகளையும் வழங்கினர்.

முன்னதாக அறந்தை ப்ரண்ட்ஸ் ரோட்டரி கிளப் தலைவர் முருகேசன் அனைவரையும் வரவேற்றார். இறுதியில் அறந்தாங்கி தி ஃபோர்ட் சிட்டி ரோட்டரி கிளப் தலைவர் சையது பாவா பகுருதீன் நன்றி கூறினார்.

# அரியலூர் அருகே கட்டுரை போட்டியில் வெற்றி பெற்ற எம்ஆர் கல்லூரி மாணவிக்கு பாராட்டு

அரியலூர், மார்.4-

மாவட்ட அளவில் நடைபெற்ற கட்டுரை போட்டியில் வெற்றி பெற்ற, மீனாட்சி ராமசாமி கல்லூரி மாணவிக்கு பாராட்டு விழா நடைபெற்றது.

இது பற்றி கல்லூரி நிர்வாகம் வெளியிட்ட செய்தி குறிப்பு:

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் தாலுக்கா, தத்தனூர், மீனாட்சி இராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், கணினி அறிவியல் துறையில் முதலாம் ஆண்டு இளங்கலை பயிலும் தெ.கங்கா என்ற மாணவி, தமிழ் வளர்ச்சித்துறை சார்பாக நடைபெற்ற மாவட்ட அளவிலான



கட்டுரைப்போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றிருந்தார்.

அதனை முன்னிட்டு அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு, ரூபாய் 7,000 காசோலை மற்றும் சான்றிதழை மாவட்ட ஆட்சியரிடம் பெற்றார்.

வெற்றி பெற்று பரிசு பெற்ற மாணவியை எம். ஆர் கல்லூரியின் தாளாளர் எம். ஆர்.இரகுநாதன், இயக்குனர் ஆர்.இராசமாணிக்கம், வை.தியாகராசன், முதல்வர் பி.சங்கீதா, கணினி அறிவியல் துறைத்தலைவர் செ.பாலமுருகன், தமிழ் துறைத்தலைவர் கு.சந்திரசேகர் மற்றும் இருபால் பேராசிரியர்கள் பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.

# புளியங்குடியில் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம்

தென்காசி,மார்.4-

தென்காசி மாவட்டம் புளியங்குடி வி.கே.சாமி திடலில் எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா, மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது.



தலைமை ராஜா ஈஸ்வரன் தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளர், முன்னிலை தனுஷ் எம். குமார், மருத்துவர் எஸ்.எஸ். செண்பக விநாயகம் மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர், இலா. கணேசன் மாவட்ட பொருளாளர், விஜயா சௌந்தர பாண்டியன் நகர் மன்றத் தலைவி, எஸ். வேலுச்சாமி பாண்டியன்,எஸ்.எம். சாகுல்ஹமீதுபொதுக்குழு உறுப்பினர்கள் , வரவேற்புரை ஆ. அந்தோணிசாமி நகரச் செயலாளர், நகர் மன்ற துணைத் தலைவர், சிறப்புரை இரா.தி.சபாபதி மோகன் திமுக கொள்கை பரப்புச் செயலாளர், திமுக பேச்சாளர்கள் க. சுப்பு, ஜப்பார், மீனாட்சிசுந்தரம், ஒன்றிய செயலாளர்கள் பொன் முத்தையா பாண்டியன், கே. பூசை பாண்டியன், லாலா சங்கரபாண்டியன், மதி மாரிமுத்து, பேரூர் திமுக செயலாளர்கள் சேது சுப்பிரமணியம், கே.டி.சி.குருசாமி, ரூபி பாலசுப்பிரமணியம்,நகர திமுக நிர்வாகிகள் காஜா மைதீன், கருப்பசாமி, ஆசைக்கனி, காந்திமதி பழனிச்சாமி, அருணாச்சலம், சுரேஷ், பெருமாள் மாரிச்செல்வம், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் பிச்சையா, சாமுவேல், சேதுராமன், பி. வி. பாலசுப்பிரமணியன், நாகூர் கனி, கவிதா மாரியப்பன், உமா மகேஸ்வரி, பொன்னுதுரைச்சி, விஜயலட்சுமி, ராஜாமணி, நீலமேகம், குருராஜ், செண்பக குத்தாலிங்கம், அழகையா, விக்ரம் மணிகண்டன், ராஜராஜன், அன்புராஜன், ரமேஷ், குருநாதன், பீர் ஒலி, தவமணி, இஸ்மாயில், பி.வி. வெங்கடேஷ், டீக்கடை காஜா, ஹபிபுல்லா, நகர தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் ஆனந்தராஜ், மோகன்ராஜ், நாகராணி, நகர் மன்ற உறுப்பினர்கள் ராஜேஸ்வரி, சித்ரா, கார்த்திகா, தங்கம், சீதாலட்சுமி, வள்ளி அண்ணாமலை, ரெஜிகலா, திமுக மூத்த முன்னோடிகள் வெங்கட்ராம ஐயர், அப்பா குட்டி அருணாச்சலம், பேராசிரியர்பழனிச்சாமி, ஞானபண்டிதன், ஜெகதீஷ், தவசி கண்ணு, சதீஷ், முருகேஷ், அக்ரி சந்திரன், நன்றியுரை ஷேக் மைதீன் நகர சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் அனைவரையும்வரவேற்று பிறந்தநாள்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட 2000-கும் மேற்பட்ட பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினர்.

# அரியலூரில் மு.க ஸ்டாலின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்

அரியலூர், மார்.4-

அரியலூரில் தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அரியலூர் அண்ணா சிலை அருகே, அரியலூர் மாவட்ட திமுக சார்பில் நடைபெற்ற, திமுக தலைவர் மற்றும் தமிழக முதல்வர் மு.கஸ்டாலின் பிறந்தநாள் விழா மற்றும் நிதி நிலை அறிக்கை விளக்கபொதுக்கூட்டம், கட்சியின் அரியலூர் மாவட்டச் செயலாளரும், தமிழக போக்குவரத்து துறை அமைச்சருமான சா.சி. சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது. நகரச் செயலாளர் இரா.முருகேசன் வரவேற்று பேசினார். சிறப்புரையாற்றிய திமுக தலைமை தேர்தல்




பணிக்குழு செயலாளர் கடலூர் இள.புகழேந்தி பேசியதாவது:

கடந்த 2019 ஆம் ஆண்டு, மதுரையில் அடிக்கல் நாட்டப்பட்ட எய்ட்ஸ் மருத்துவமனைக்கு, அடுத்தகட்டபணிஎதுவும் நடைபெறவில்லை. ஆனால் வட மாநிலங்களில் இதே காலகட்டத்தில் அடிக்கல் நாட்டப்பட்ட, அனைத்து எய்ம்ஸ் மருத்துவமனைகளும் திறந்து செயல்படுகின்றன. இந்த பிரச்சினையில் உள்ள குளறுபடிகள் குறித்து, தமிழக விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஓங்கி அடித்துள்ளார்.

நரேந்திர மோடி பிரதமராக வந்த பிறகு, குழந்தைகளுக்கு கொடுக்கும் பால் உள்பட, அனைத்து பொருட்களுக்கும் ஜி எஸ் டி வரி போடப்பட்டது. இந்த வரி வருவாயிலிருந்து, உத்திர பிரதேச மாநிலத்திற்கு பதினாறு மடங்கு அதிகமாக கொடுக்கப்படுகிறது. ஆனால் தமிழகம் செலுத்தும் ஒரு ரூபாயில், 28 பைசா மட்டுமே திருப்பித் தரப்படுகிறது. இதுதான் நரேந்திர மோடி கவர்மெண்ட் லட்சணமாக உள்ளது. வரியாக இருந்தாலும், மொழியாக இருந்தாலும், வேலைவாய்ப்பாக இருந்தாலும், தமிழகம் புறக்கணிக்கப்படுகிறது. தமிழர்களுக்கு எந்த வாய்ப்பும் வழங்கப்படவில்லை. இந்த அளவுக்கு தமிழர்களுக்கு துரோகம் இழைக்கும் பிஜேபிக்கு, மானமுள்ள தமிழர்கள் யாரும் ஓட்டு போட மாட்டார்கள். தமிழக முதல்வர் மு க ஸ்டாலின், கைகாட்டு பவருக்குத்தான் நாங்கள் ஓட்டு போடுவோம் என, தமிழக மக்கள் முடிவெடுத்து விட்டார்கள், இவ்வாறு கடலூர் இள.புகழேந்தி பேசினார்.

திமுக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் பெறுநற்கிள்ளி, தலைமை திமுக பேச்சாளர் இளஞ்செழியன், கவிஞர் வீர.முரசு, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் கீதா ஜெயவேல், மற்றும் மாவட்ட,ஒன்றியகிளைக் திமுக நிர்வாகிகள், பல்வேறு அணி நிர்வாகிகள் உட்பட, பலரும் கலந்துகொண்ட இக்கூட்டத்தின் முடிவில், திமுக நகர துணை செயலாளர் உத்திராபதி நன்றி கூறினார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.


# ஜிஎஸ்டி, பணமதிப்பிழப்பு மூலம் சிறுதொழில்களை மோடி அழித்து விட்டார்; ராகுல் காந்தி





# மயிலாடுதுறை மாவட்டத்தின் புதிய ஒருங்கிணைந்த மாவட்ட ஆட்சியரகம் இன்று திறப்பு

# அரசியலைவிட்டு விலகுவதாக முன்னாள் மத்திய அமைச்சர் ஹர்ஷ் வர்தன் அறிவிப்பு




சென்னை / புதுக்கோட்டை | 04.03.2024 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

04.03.2024 திங்கள்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

தாருலதா தத் , இந்தியக் கவிஞர் (பி.1856) (இ.1877)



அன்ரன் பாலசிங்கம் , விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் (பி.1938) (இ.2006)



மூ. அருணாச்சலம் , தமிழக அரசியல்வாதி (பி.1944) (இ.2004)



## இன்றைய நினைவு நாள்

சண்முக ராஜேஸ்வர சேதுபதி , தமிழக அரசியல்வாதி, தொழிலதிபர் (பி.1909) (இ.1967)



நீலகண்ட பிரம்மச்சாரி , இந்திய விடுதலைப் போராட்டச் செயற்பாட்டாளர் (பி.1889) (இ.1978)



அர்ஜுன் சிங் , இந்திய அரசியல்வாதி (பி.1930) (இ.2011)



தேசிய தொழிலாளர்கள் பாதுகாப்பு தினம் (இந்தியா)